**செ.வெ.எண்.598** **நாள்.18.12.2016**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 19.12.2016 (திங்கட்கிழமை) அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை டெல்லியில் சந்தித்து, தமிழ்நாட்டில் ''வர்தா'' புயலினால் ஏற்பட்ட சேதத்திற்கு மத்திய அரசு நிவாரணம் அளிக்கவும் மற்றும் தமிழ்நாடு சார்பாக பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினையும் அளிக்க உள்ளார்கள். மேலும் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ''பாரத ரத்னா'' விருது அளிக்க வேண்டியும், மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முழு திருவுருவ வெங்கலச் சிலையினை நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கவும் கடிதங்களை அளிக்க உள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், 19.12.2016 அன்றே சென்னை திரும்புகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி –மக்கள் தொடர்பு துறை, சென்னை–9.**